**SC.NO.79/2018** **Date: 09.01.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு.துரைசாமி என்ற **Pw13** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு. துரைசாமி

த/பெ – பெரியசாமி

வயது – 71/2026

தொழில் – உதவி ஆய்வாளர் (ஓய்வு)

**முதல் விசாரணை**

நான் தற்போது மணிமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2011 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். 2008ம் வருடத்தில் சிவகாஞ்சி காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். அப்போது குற்ற எண்.148/2008, பிரிவு 457, 380 இ.த.ச வழக்கில் களவு போன சொத்தையும் எதிரியையும் கண்டுபிடித்த போது 10.05.2008ம் தேதி காலை 07.00 மணிக்கு காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் சந்தேகம்படும்படியான நின்றிருந்த எதிரிகள் தாமோதரன், தனேசேகர் ஆகியோரை பிடித்து விசாரணை செய்த போது மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் என்று தெரிய வந்தது. இவர்களிடம் தனித்தனியே ஒப்புதல் வாக்குமூலம் பெற சாட்சிகள் மோகன் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் மேற்படி எதிரிகளிடம் தனித்தனியே ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. தாமோதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தாமோதரன், தனசேகரன், தேவு (எ) தேவராஜ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் ஒன்று

சேர்ந்து தாம்பரம் மற்றும் காஞ்சிபுரத்தில் இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களை திருடி விற்று பணம் பங்கு போட்டுக்கொள்வதாகவும் தனசேகரனும், தாமோதரனும் இருவரும் ஒன்று சேர்ந்து 18.02.2008 அன்று இரவு எஸ்.என்.ஓடை தெருவில் உள்ள அரசு மதுபான கடையில் பின்புற சுவற்றை இடித்து துளையிட்டு உள்ளே சென்று பணத்தை களவாடி சென்றுவிட்டார்கள். களவாடிய பணம் ரூ.45,000/-. அதை சரிசமமாக இருவரும் பங்கு போட்டுக்கொண்டார்கள். பின்னர் இருவரும் பெங்களூரு சென்று அந்த பணத்தை வைத்து ஜாலியாக செலவு செய்துவிட்டு 01.05.2008ம் தேதி காஞ்சிபுரம் பூக்கடை சத்திரம் அருகே இருவரும் நின்று கொண்டிருந்த போது தேவு (எ) தேவராஜ் என்பவர் தாமோதரன் என்பவரிடம் வந்து 9 சவரன் நகை கொடுத்து அதை அடகு வைத்து பணம் கொடுக்குமாறு தெரிவித்ததன் பேரில் தாமோதரன் என்பவர் அந்த நகைகளை அடகு வைத்து தேவராஜுக்கு பணம் கொடுத்துள்ளார். பிறகு தாமோதரன் தான் அடகு வைத்த அடகு கடையை அடையாளம் காட்டுவதாக சொன்னதன் பேரில் மேற்படி சாட்சிகள் மோகன், ரவி ஆகியோர் முன்னிலையில் அவர் அடையாளம் காட்டிய நகை கடை சீனு ஆச்சாரி மற்றும் அசோக் குமார் ஆகியோர் கடையில் அடகு வைத்த நகைகளை கைப்பற்றுதல் மஜரில் கைப்பற்றினேன். விசாரணையில் தேவு (எ) தேவராஜ் தான் திருடிய மேற்படி 9 சவரன் நகை என தாமோதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மூலம் தெரிய வந்தது. பின்னர் விசாரணை முடித்து குற்ற

எண்.148/2008 பிரிவு 457, 380 இ.த.ச வழக்கில் எதிரிகள் தாமோதரன், தனசேகரன் ஆகியோரை உரிய நீதிமன்றத்தில் முறையாக ஆஜர் செய்து தாமோதரன் மூலமாக பரிமுதல் செய்யப்பட்ட நகைகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. தாமோதரன், தனசேகரன் மற்றும் தேவு, மோகன், மணிகண்டன், மஞ்சுநாதன் ஆகியோர் ஒன்று சேர்ந்து திருட்டி தொழில் செய்துவருதாக தாமோதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மூலம் தெரிய வந்தது. பின்னர் சிவகாஞ்சி காவல் நிலைய குற்ற எண்.361/2008 பிரிவு 302, 201 இ.த.ச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் தேவு (எ) தேவராஜ், மணிகண்டன், மோகன், தாமோதரன் ஆகியோருடன் மஞ்சுநாதன் சேர்ந்து திருட்டு தொழிலில் ஈடுபட்ட போது மஞ்சு நாதன் என்பவர் அந்த களவு போன சொத்தை விற்பனை செய்து பாகம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார் என தாமோதரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மூலம் தெரிய வந்தது. 2007ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு நாள் மேற்படி மஞ்சுநாதன், குமரன் ஆகிய இருவரும் நீதிமன்றத்திற்கு வந்த போது தாமோதரன் மூலமாக மோட்டார் சைக்கிளில் வந்து இவர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு காஞ்சிபுரம் லாலா தோட்டத்தில் வைத்து மேற்படி எதிரிகளுடன் சேர்ந்து கத்தியால் மஞ்சுநாதனையும், குமரனையும் வெட்டி கொலை செய்துள்ளார்கள் என மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மூலம் தெரிய வந்தது. குற்ற எண்.148/2008 பிரிவு 457, 380 இ.த.ச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் தாமோதரன், தனசேகரன் ஆகியோரை

கைது செய்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் படி மேற்படி எதிரிகள் ஒன்று சேர்ந்து திருட்டு தொழிலில் ஈடுபட்டு பாகப்பிரிவினையின் போது ஒருவொருக்கொருவர் மனஸ்தாபம் ஏற்பட்டு மஞ்சுநாதனையும், குமரனையும் வெட்டி கொலை செய்துள்ளனர் என அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் தெரிய வந்தது. இது சம்மந்தமாக 06.11.2009ம் தேதி சிவகாஞ்சி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார். வாக்குமூலத்தில் படித்து பார்த்தேன், நான் சொன்னடி அதில் இருந்தது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் குற்ற எண்.148/2008 என்ற வழக்கில் தான் விசாரணை அதிகாரியாக இருந்து தாமோதரன் மற்றும் தனசேகரன் ஆகியோரை விசாரணை செய்தேன் என்றால் சரிதான். குற்ற எண்.361/2008 என்ற வழக்கில் நான் எவ்விதமான புலன் விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது குற்ற எண்.148/2008 வழக்கில் தாமோதரன் மற்றும் தனசேகரன் ஆகியோர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் அந்த வழக்கில் கோப்பில் உள்ளது. இந்த வழக்கில் தனசேகரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகலை நான் கொடுக்கவில்லை என்றால் குற்ற எண்.148/2008 வழக்கு கோப்பில் உள்ளது. குற்ற எண்.148/2008

என்ற வழக்கில் தாமோதரன், தனசேகரன், தேவு (எ) தேவராஜ் ஆகிய மூவரும் தான் குற்றவாளி தான் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் ஒப்புதல் வாக்கமூலத்தில் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் திருட்டு தொழில் செய்தோம் என்று சொல்லியிருந்தால் அவர்களையும் இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்த்திருப்பேன் என்றால் 302 இ.த.ச ஆய்வாளர் வழக்கு. குற்ற எண்.148/2008 என்ற வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போதே குற்ற எண்.361/2008 என்ற வழக்கு பற்றி தகவல் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டது என்றால் சரிதான். குற்ற எண்.361/2008 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது நான் சிவகாஞ்சி காவல் நிலையத்தில் தான் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். டிசம்பர் 2008 ஆண்டு வரை ஆய்வாளர் என்னை இந்த வழக்கு குறித்து விசாரணை செய்யவில்லை என்றால் நான் உத்திரமேரூர் காவல் நிலையத்திற்கு பணிமாறுதலில் சென்றுவிட்டேன், 06.11.2009 அன்று தான் என்னை விசாரணை செய்தார்கள். குற்ற எண்.361/2008 என்ற வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியபடி ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. குற்ற எண்.148/2008 வழக்கில் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு தனசேகரன், தாமோதரன் ஆகிய எதிரிகள் எவ்விதமான ஒப்புதல் வாக்கமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற

எண்.361/2008 வழக்கின் விவரம் எதுவும் கூறப்படவில்லை என்றாலும் ஆகையால் தான் குற்ற எண்.148/2008 என்ற வழக்கில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாமோதரன், தனசேகரன், மஞ்சுநாதன், தேவராஜ் ஆகியோர் சேர்ந்து தான் திருட்டு தொழில் செய்தார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் நான் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வழக்கில் என்னை தொடர்புபடுத்தி நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)